[1987 ஏப்ரல் 20

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவா அவர்களே, இந்த அரசு பேச்சுவார்த்தையில் நம்பிக்கையுள்ள அரசு. ஆகவே அவர்களை அழைத்துப் பேசுவதில் எந்தத் தயக்கமும் கிடையாது. பேசி ஒரு நல்ல முடிவு காணலாம்.

(இ) மதுவிலக்கு அமலால் சேலம் மாவட்ட வருவாய் அலகில் சிலர் பணிநீக்கம்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருவாய்த் துறை பிரிவின்கீழ், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 1984 ஆம் ஆண்டு தொகுதி நான்கில் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வந்த இளநிலை உதவியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாட்டில் மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்டதால் சில மாவட்டங்களில் பணியிடம் காலியின்மையால் ஒரு சிலர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதன் விளைவாக சேலம் மாவட்ட வருவாய் அலகில் பணிபுரிந்துவந்த 79 இளநிலை உதவியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். இந்த 79 நபர்களில் 8 பேர்கள் தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் சேலம் மாவட்ட வருவாய் அலகில் 1984-ல் பணியமர்த்தப்பட்டு பின்பு பணியிடமின்மையால் பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள். இவர்களை வேறு துறைகளுக்கு மறு ஒதுக்கீடு செய்ய தமிழ்நாடு தேர்வாணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது. மீதமுள்ள 71 பேர்கள் 22—9—1984 நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அரசாணை எண் 996-ன்படி சேலம் மாவட்ட வருவாய் அலகில் பணியமர்த்தப்பட்டு பின்பு பணியிடமின்மையால்

1987 ஏப்ரல் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மறு ஒதுக்கீடு செய்ய தமிழ்நாடு தேர்வாணையத்திற்கு தெரிவிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட 71 பேர்களுக்கு அரசே மறு ஒதுக்கீடு செய்யவேண்டும் என தமிழ்நாடு தேர்வாணையம் தற்போது கூறியுள்ளதால் இவர்களை வேறு துறைகளில் ஒதுக்கீடு செய்ய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, பணிநீக்கம் செய்யப்பட்ட இவர்களுக்கு பல்வேறு துறைகளில் ஒதுக்கீடு செய்ய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற செய்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடியதாய் நிச்சயம் இருக்கும். 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேர்வாணைக் குழு வால பணியிலமர்த்தப்பட்ட ஜூனியர்ஸ் இன்றைக்கு பணியில் தொடர்ந்து இருந்து வருகிற நிலையில், 1984 ஆம் ஆண்டு பணியிலமர்த்தப்பட்ட சீனியர்ஸ் ஆன இவர்கள் பணிநீக்கம் செய்யப் பட்டு இருப்பது உள்ளபடியே பரிதாபத்திற்குரிய ஒன்று. அத்தோடு அவர்களுக்கு இப்போது 'பிரேக் ஆஃப் சர்வீஸ்' ஏற்பட்டிருக்கிறது. எனவே பணியிலமர்த்தப்பட்ட பிறகாவது அவர்களுக்கு இது 'கன்டினியூவஸ் சர்வீசாக' ட்ரீட் செய்யப்படுமா? அவர்களுடைய 'சீனியாரிட்டி' பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புவதோடு, இன்றைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, 7, 8 மாதங்கள் ஓடி விட்டன. அவர்களுக்கு விரைவான நியமனம் கிடைக்கும் வகையில் அரசு பார்த்துக்கொள்ளுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இவர்களுக்கு மறு ஒதுக்கீடு செய்யும்படியாக தேர்வாணையைக் கேட்டுக்கொண்டோம். தேர்ந்தெடுக்கின்ற வேலை தான் தங்களுக்கு தவிர, மறு ஒதுக்கீடு அரசே செய்ய வேண்டும் என்று அவர்கள் சொல்லிவிட்டதன் காரணமாக இப்பொழுது மறு ஒதுக்கீடு செய்கின்ற பணியை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆனால் அவர்களுடைய பணி விதிகள் மற்றவைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான், அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டபோது அவர்கள் புரோபேஷனில் இருந்தார்களா அல்லது பெர்மனன்ட்டாக ஆனவர்களா என்ற வகைகளை எல்லாம் பார்த்து அவர்களுடைய பணி மூப்பு நிலை மற்ற

வைகள் எல்லாம் ஆராய்ப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற கருத்துக்களை நினைவிலே வைத்து, சட்டப்படி, விதிப்படி எதைச் செய்ய இயலுமோ அதை அரசு செய்ய முன்வரும்.

(ஈ) அம்மன்பேட்டையிலுள்ள நவீன அரிசி ஆலை கழிவுநீரால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம் அம்மன் பேட்டையில் அமைந்துள்ள தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் நவீன அரிசி ஆலையில் இருந்து வெளியேறும் கழிவு நீரால், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் ஏற்படும் விவசாயப் பயிர் பாதிப்பு, குடிநீர் பாதிப்பு மற்றும் சுற்றுப்புற சுகாதார சீர்கேடு ஆகியவற்றால் அப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

நவீன அரிசி ஆலையானது தஞ்சாவூர் மாவட்டம் அம்மன் பேட்டை கிராமத்தில் அமைந்துள்ளது. இந்த ஆலை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் பொறுப்பில் உள்ளது. இவ்வாலையில், நாளொன்றுக்கு 50 டன் புழுங்கல் அரிசி உற்பத்தி ஆகிறது. நெல் இரும்புத் தொட்டிகளில் ஐந்து மணி நேரத்திற்கு 70 டிகிரி சென்டிகிரேடு வெப்ப அளவில் ஐந்து மணி நேரம் ஊற வைக்கப்படுகிறது. இதற்குப் பின் கழிவுநீர் வெளியேற்றப்பட்டு நெல் நீராவியின் மூலம் அவிக்கப்படுகிறது. அவிக்கப்பட்ட நெல் வெப்பக் காற்று மூலம் உலர வைக்கும் இயந்திரத்தில் ஐந்து மணி நேரம் உலர வைக்கப்படுகிறது. உலர்த்தப்பட்ட நெல் அரவை இயந்திரம் மூலம் அரைக்கப்பட்டு அரிசியாக்கப்படுகிறது. ஊற வைக்கும் தொட்டியிலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவுநீர் ஆலையின் தொழிற்சாலைக் கழிவு நீராகும். தொழிற்சாலை நாளொன்றுக்கு 80,000 லிட்டர் தண்ணீரை உபயோகித்து 60,000 லிட்டர்கள் தொழிற்சாலைக் கழிவு நீரை வெளி விடுகிறது.